**செ.வெ.எண்:179** **நாள்-18.03.2021**

# கும்பகோணம் சட்டமன்ற தேர்தல் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

தஞ்சாவூர் மாவட்டம் சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வாக்கு மையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.03.2021) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கும்பகோணம் நகராட்சியில் சாலையோர நகராட்சி சுவர்களில் கொரோனா மற்றும் சட்டமன்ற தேர்தல் 2021 விழிப்புணர்வு ஒவியங்கள் வரையப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம. கோவிந்த ராவ் இ.ஆ.ப., அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டு நகராட்சி அலுவலர்களிடம் அரசு சுவர்களில் தேர்தல் விளம்பரம் அளிக்கப்பட்டுள்ள இடங்களில் மேலும் விழிப்புணர்வு ஒவியங்கள் வரைந்திட அறிவுறித்தினார்.

அதனை தொடர்ந்து கும்பகோணம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு மின்னனு வாக்குப்பதிவு இயந்திரம் செயல்பாடு குறித்தும், மின்னனு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்காளர்கள் வாக்களிக்கும் போது யாருக்கு வாக்களித்தோம் என்பதனை அறியும் VVPAT இந்திரம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று நேரில் பார்வையிட்டார். வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான தபால் ஓட்டுசீட்டு தயார் செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வளாகத்தின் மேல் மாடியில் சட்டமன்ற தேர்தலுக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பொருட்கள் வைப்பறையை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து கும்பகோணம் அரசினர் கலை கல்லூரியில் கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு பணிகளை விரைவாக முடித்திட அலுவலர்களை அறிவுறித்தினார்.

ஆய்வின் போது கும்பகோணம் நகராட்சி ஆணையர் திருமதி. லெட்சுமி, வட்டாட்சியர் திரு. கண்ணன், வட்ட வழங்கல் அலுவலர் திரு. கார்த்திகேயன் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர். தஞ்சாவூர்.**